හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம
**Department of Treasury Operations**

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, තැ.පෙ. 1559, කොළඹ 01.
பொதுத்திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, த.பெ.இல.1559, இகொழும்பு 01.
General Treasury, Ministry of Finance & Planning, P.O.Box: 1559, Colombo 01.

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 0094 112 484729, tod_dg@tod.treasury.gov.lk
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0094 112 320042, 0094 112 484828
පොදු / பொது / General: 0094 112 484500, 0094 112 484600


මගේ අංකය / எனது இல / My No.
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date

**திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை 5/2010** 2010-10-29

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் யாவர்க்கும்

**அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள காசுப்பாய்ச்சல் முகாமைத்துவ முறையினை மேம்படுத்துதல்**

பொதுத்திறைசேரியினால் தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்தில் சம்பளக் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான திரவப்பணத்தினை குறைந்த செலவில் உரிய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளுக்கு வங்கி வலைப்பின்னல் (Bank Network) முறையில் திறைசேரி ஒற்றைக்கணக்கு செயல்முறையில் விடுவிக்கின்றது.

02. அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் தயாரிக்கும் பொருட்டு தற்போது கணனி முறையில் (GPS) சம்பளக்கொடுப்பனவு விரைவாகவும் வினைத்திறனுடனும் செற்படுத்துவதுடன் , முகாமைத்துவத் தகவல்களை விரைவாகவும் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அமைச்சுக்களின் கீழும் திணைக்களங்களின் கீழும் இயங்கும் எல்லாக் கொடுப்பனவுப் பிரிவுகளும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை பாவித்து சம்பளம் தயாரிப்பதற்கு சம்பளக் கொடுப்பனவு செய்யும் பொருட்டுத் தேவையான திரவப்பணத்தை சரியாகக் கணக்கிடாத சந்தர்ப்பத்தில் சம்பளக் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதிகளைத் தவிர, ஒழுங்கான அனுமதி இல்லாமல் முன்னதாகவே சம்பளம் கொடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் தெரியவருகிறது.

03. தற்போதும் அனேக அமைச்சுக்களும் திணைக்களங்களும் கொடுப்பனவு நிறுவனங்களும் வழமையான சம்பளக் கொடுப்பனவைக் காசாக மேற்கொள்ளாது குறித்த தினத்தில் அவர்களின் வங்கிக் கணக்கிலிடுவதன் மூலம் சிக்கனம் , பாதுகாப்பு பேணப்படுவதற்கு அரச ஊழியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை வங்கிக் கணக்கினூடாக சம்பளம் வழங்கப்படாத அமைச்சுக்களும் திணைக்களங்களும் இதிலுள்ள வசதிகளையும் நன்மைகளையும் ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி வங்கிக் கணக்கின் மூலம் சம்பளக் கொடுப்பனவை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

04. ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவின் பொருட்டு வேண்டிய பணத்தினை குறைந்த செலவில் பெறுவதனை முகாமை செய்வதற்காக தங்கள் நிறுவன ஊழியர்களின் விபரங்களை மாதாந்தம் பெறவேண்டியுள்ளது. இதன் பொருட்டு அரச ஊழியர்களுக்கு தற்போது அரசாங்க சம்பளக் கொடுப்பனவு முறைமையின் (GPS) ஊடாக 'சம்பளக் கொடுப்பனவும் ஆளணி அறிக்கையையும் (Salary Payment & Cadre Report ) சம்பளப் பொழிப்பு அறிக்கையையும் (Salary summary Report) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ்வரும் மின்னஞ்சல் (e-mail) முகவரிகளுக்கு அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.


අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (මුදල් ප්‍රවාහ සහ ඒකාබද්ධ අරමුදල් කළමනාකරණය) / மேலதிக பணிப்பாளர் நாயகம் (காசுப்பாச்சலும் திரட்டு நிதி முகாமைத்துவமும்) / Additional Director General (Cash Flows & Consolidated Funds Management) — Tel : 0094 112 484738, Fax : 0094 112 484852

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (ණය සේවා සහ ගිණුම්) / மேலதிக பணிப்பாளர் நாயகம் (கடன் சேவைகளும் கணக்குகளும்) / Additional Director General (Debt. Servicing & Accounting) — Tel : 0094 112 484748, Fax : 0094 112 484828, jayarathnak@tod.treasury.gov.lk

අධ්‍යක්ෂ (අරමුදල් කළමනාකරණය) / பணிப்பாளர் (நிதி முகாமைத்துவம்) / Director ( Funds Management) — Tel: 0094 112 484971, ranasirid@tod.treasury.gov.lk

අධ්‍යක්ෂ (ණය සේවා සහ ගිණුම්) / பணிப்பாளர் (கடன் சேவைகளும் கணக்குகளும்) / Director (Debt. Servicing & Accounting) — Tel: 0094 112 484750, hettiarachchis@tod.treasury.gov.lk

අධ්‍යක්ෂ (ආදායම්) / பணிப்பாளர் (வருமானம்) / Director (Revenue) — Tel : 0094 112 484741, ajithc@tod.treasury.gov.lk

| அலுவலரின் பெயர் | பகுதி | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| திரு. T. நளீன் ஓஸன்<br>பிரதிப் பணிப்பாளர் | தேசிய பாதுகாப்பு, சட்டம், நீதி அமுலாக்கலுக்கான நிர்வாகம் | nalino@tod.treasury.gov.lk |
| திரு S.A.S விக்கிரமரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | உட்கட்டமைப்புஅபிவிருத்தி, வாழ்வாதார, பிராந்திய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு | wickramas@tod.treasury.gov.lk |
| செல்வி. P.D.N.P.தர்மரத்ன<br>உதவிப் பணிப்பாளர் | ஆட்சி, செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு | nayanap@tod.treasury.gov.lk |
| திருமதி M.A.B.L.மனோஹரி<br>உதவிப் பணிப்பாளர் | மனிதவளஅபிவிருத்தி, கலை கலாச்சாரமும் விஞ்ஞானமும் , தொழில்நுட்பம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | manoharib@tod.treasury.gov.lk |
| செல்வி K.S. தயாரத்ன<br>உதவிப் பணிப்பாளர் | உற்பத்தி, சேவைகளும் சூழலும் | sajeevani@tod.treasury.gov.lk |

05. உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கிற்கு சம்பளக் கொடுப்பனவிற்காக மேற்படி அறிக்கை பரீட்சிக்கப்பட்டே பணம் விடுவிக்கப்படும். அறிக்கை அனுப்புவதில் ஏற்படும் தாமதங்கள் சம்பளத்திற்கான பணம் விடுவிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தும். சம்பளத் திகதிக்கு முதல்நாள் தங்கள் உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பப்படும். இக்காலப்பகுதி போதுமானதாக இல்லாதுவிடத்து காரணங்களுடன் முன்கூட்டியே அறியத்தரும் பட்சத்தில் பணம்விடுவித்தல் செய்வதற்கான திகதியில் மாற்றம் செய்யப்படலாம்.

06. இச் சுற்றுநிரூப அறிவுறுத்தல்கள் 01.01.2011 இலிருந்து செயற்படுத்தப்படும்.

ஒப்பம்: பீ.பி. ஜயசுந்தர
நிதி திட்டமிடல் அமைச்சினதும் திறைசேரியினதும் செயலாளர்

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்